சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 2/2010

பெயர் திரு. இளங்கோ நாள். 22.07.2026
த/பெ. பெருமாள்

**3, 5, 9 மற்றும் 10 பிரதிவாதிகள் சாட்சி 1 (DW2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

( குறுக்கு விசாரணை ஆரம்பித்த நேரம் 2.47 PM )

1. வழக்கு 2 ம் பிரதிவாதி என்மீதும் என் மனைவி மீதும் இந்நீதிமன்றத்தில் மு.வ.89/2013 வழக்கை இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அவ்வழக்கு தள்ளுபடி செய்யபட்டதால் 2 ம் பிரதிவாதி செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு காலத்தில் எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் இடையே பேச்சுவார்த்தை இருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் 2 ம் பிரதிவாதி அந்த மேல்முறையீட்டை திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான்.

2) **பி.த.சா.ஆ.15** முன்பு வரை எங்களுக்கு எந்த கருத்தும் வேறுபாடும் இல்லை என்று சொன்னால் சரிதான். பொதுவாக கருத்து வேறுபாடு ஏற்ப்பட்டால்தான் பாகப்பிரிவினை செய்யப்படும் என்றால் சரியல்ல. **பி.த.சா.ஆ.15** ல் 1994 வருட பாகப்பிரிவினை பற்றி குறிப்பில்லை என்றால் சரிதான். என் மனைவி இறப்பதற்கு முன்வரை என் பராமரிப்பில்தான் இருந்தார் என்றால் சரிதான். எனக்கும் என் மனைவிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் ஏதும் கிடையாது. 2 ம் பிரதிவாதி கரும்பு விற்ற தொகைக்காக என் மனைவிக்கு சொத்தை கிரையம் கொடுத்தேன்.

3) எனவே, **வா.த.சா.ஆ.10 ன்** கீழ் 2ம் பிரதிவாதிக்கு முழு கிரையத்தை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கரும்பு விற்ற தொகை மற்றும் திருமணம் செலவிற்காக தொகை கொடுத்துள்ளேன். மேற்கண்ட வாசகங்கள் **வா.த.சா.ஆ.10** ல் இல்லை என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதி எவ்வித கரும்பு விற்ற தொகை தர கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், வா.த.சா.ஆ. 10 ன் கீழ் எவ்வித தொகையும் 2ம் பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை.

4) நானும் 2ம் பிரதிவாதியும் மது அருந்தும் பழக்கம் இருந்தும், 2ம் பிரதிவாதியின் சொத்துகளை அபகரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தை எழுதும்போழுது 2ம் பிரதிவாதியை உடல்நிலை சரியில்லாததால் காரில் அழைத்து சென்றேன். உடல்நிலை சரியில்லாத அவரிடம் ஏன் பொது அதிகார ஆவணம் எழுத அழைத்து சென்றேன் என்றால், அவர் தான் பொது அதிகார ஆவணம் எழுத வேண்டும் என்றும், அவர் கொடுத்த தொகைக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுப்பதாகவும் கூறினார். தற்போது சாட்சி 2ம் பிரதிவாதியை பேருந்தில் அழைத்து சென்றதாக கூறுகிறார். அவரை பொட்டிவாக்கத்திலிருந்து பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பேருந்தில் அழைத்து சென்றேன். உடல்நிலை சரியில்லாதவரை எவ்வாறு பேருந்தில் அழைத்து சென்றேன் என்றால் உடல்நிலை சரி செய்து அழைத்து சென்றேன்.

5) பொது அதிகாரம் எழுத அவரை அழைத்து சென்றேன் என்றால் அவர் தான் பொதுஅதிகார ஆவணம் எழுதிகொடுப்பதாக கூறினார். 2ம் பிரதிவாதிக்கு அதிக மது ஊற்றிக்கொடுத்து அவரை காரில் அழைத்து சென்று பொது அதிகார ஆவணத்தை அவரிடம் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் எழுதி பெறப்பட்ட அன்று 2ம் பிரதிவாதிக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை 2ம் பிரதிவாதியை வழக்கு சொத்தில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் அவர் உடல்நிலை கருதி நான் எடுக்கவில்லை. இன்று வரை 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் நான் அவரை குடியிருக்கவிட்டு வைத்துள்ளேன். 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியாது. என் வழக்கறிஞர் மூலமாக நான் தெரிந்துக்கொள்ளவில்லை.

6) அவருக்கு எனக்கும் என் மனைவிக்கும் எதிராக கருத்து கூறியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் 2ம் பிரதிவாதியை நான் குடியிருக்க அனுமதி அளித்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையிட்ட காலம் முதல் இன்றைய தேதிவரை 2ம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தை குடியிருந்து வருகிறார் என்றால் என் அனுமதி பேரில் குடியிருந்து வருகிறார். என் அனுமதி பேரில் குடியிருந்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதியை ஏமாற்றி பொதுஅதிகார ஆவணத்தை எழுதிக்கொண்டேனா என்றால் சரியல்ல.

7) 2ம் பிரதிவாதியின் சொத்துகளை அபகரிக்க ஆவணங்கள் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேல்முறையீடு காலத்தில் சொத்துகளை திருப்பி கொடுத்துவிடுவதாக வாக்குறுதி அளித்து ஏமாற்றி 2ம் பிரதிவாதியை மேல்முறையீட்டை திரும்ப பெற்றுக்கொள்ள கூறினேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் என் மனைவிக்கு எவ்வித அனுபவம் கிடையாது என்றால் சரியல்ல. என் மனைவி உயிருடன் இருந்த காலம் முதல் வழக்கு சொத்தை அனுபவம் செய்ததது கிடையாது என்றால் சரியல்ல. எனவே, வழக்கு சொத்து எவ்வித உரிமை அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை முடியும் நேரம் 3.32 PM )

**<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)